**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No.88/2021**
**Deposition of witness of Plaintiff – P.W.1(காஜாமைதீன்)**
**15.10.2025**

**3ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. நான் 10ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான்.

2. வழக்கில் 1, 3 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை படித்து தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன்.

3. தாவா சொத்தை 1ஆம் பிரதிவாதியின் தகப்பனார் 1945ஆம் வருடம் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் கிரையம் வாங்கியுள்ளார் என சொல்லியுள்ளதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் மூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு மூல பத்திரம் தாக்கல் செய்யவில்லை என்றும், தாக்கல் செய்துள்ளதாக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

4. தாவா சொத்து சம்மந்தமாக வருவாய் துறை ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தை 1ஆம் பிரதிவாதி அடைந்து அனுபவம் செய்து வந்தார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5. தாவா சொத்து 1ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து அல்ல என அவர் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி விவரத்தை தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை.

6. 02.08.1972ல் ரமீசாபீவிக்கு 1ஆம் பிரதிவாதி எழுதிக்கொடுத்ததாக சொல்வது பொய் என்றும், அவ்வாறு எழுதி கொடுப்பதற்கு 1ஆம் பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

7. வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் சர்வே எண் 242/13 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. சர்வே எண் 242/2 சொத்தானது 1972ல் யார் பெயரில் பட்டா இருந்தது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

9. சர்வே எண் 242/13 க்கு நாளது தேதியில் எனது பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்து குறித்த ஆவணம் எதுவும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் அதுகுறித்த ஆவணம் எதுவும் என்னிடம் இல்லை.

10. சர்வே எண் தொடர்பாக இவ்வழக்கிற்கு முன்பு சட்ட நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் இல்லை. 02.01.1986ஆம் தேதி தாவா சொத்தை ரமீசாபீவியிடம் இருந்து எனது தகப்பனார் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் காலத்தில் இருந்து இவ்வழக்கு தாக்கல் செய்யும் காலம் வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

11. தாவா சொத்து செட்டில்மென்ட் காலத்தில் இருந்து நாளது வரை 3ஆம் பிரதிவாதியின் தகப்பனார் அடைக்கக்கோனார் பெயரில் உள்ளது என்றால் சரிதான்.

**3ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in Open Court, read over to the witness and acknowledgedby him and found correct.

ஒம்/—திரு.C.ராஜேஷ்,
சார்பு நீதிபதி,
கீரனூர்.